சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.42/2025

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 06ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. குசேலதாஸ்<br>த/பெ. சுப்பராயன் | நாள் 06.07.2026 |
| வயது. 71 | வட்டம் |
| கிராமம். புதுப்பட்டு | மாவட்டம். |

<u>வாதிகள் சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. நான் வழக்கில் 1ம் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 10.09.2007 தேதியில் நாங்கள் வள்ளியம்மாளுக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார சார்பதிவு நகல் **வா.த.சா.ஆ.1** 24.12.2024 தேதியில் பிரதிவாதிகளுக்கு நாங்கள் அனுப்பிய அறிவிப்பின் நகல் **வா.த.சா.ஆ.2. 1**ம் பிரதிவாதி அதனை பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.த.சா.ஆ.3.** 2முதல் 4 பிரதிவாதிகள் அதனை பெற்றுக் கொள்ளாமல் அஞ்சலுறைகள் **வா.த.சா.ஆ.4 முதல் 6.** 04.01.2025 தேதியில் நாங்கள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் **வா.த.சா.ஆ.7.** பிரதிவாதிகள் அதனை பெற்றுக் கொள்ளமால் அதனை திருப்பிய அஞ்சலுறைகள் முறையே **வா.த.சா.ஆ.8**

**முதல் 12. வ**ழக்கு சொத்திற்கான மதிப்பீடு சான்று வா.த.சா.ஆ.13. என் பெயரிலுள்ள ஒப்படைவு பட்டா **வா.த.சா.ஆ.14.** 2ம் வாதி பெயரில் உள்ள ஒப்படைவு பட்டா **வா.த.சா.ஆ.15.** என் தயார் பெயரிலுள்ள ஒப்படைவு பட்டா **வா.த.சா.ஆ.16.**

**குறுக்கு விசாரணை**

(1, 2 மற்றும் 4 பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களின்
வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)